19.09.2018. S.T.C.No.122/17 - PW-1 - Raman

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின்பேரில் குறுக்குவிசாரணை

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக 15 ஏக்கர் நிலம் உள்ளது. ஆண்டுதோறும் விவசாயம் செய்து வருகிறேன். 6 மாதத்திற்கு ஒருமுறை பயிர் வைப்பேன். அதில் ஒவ்வொரு முறையும் ரூ 3, 4 லட்சம் என கிடைக்கும். தை மாதம் பருத்தி எடுப்போம். தை, மாசி மாதவாக்கில் நெல் அறுவடை செய்வேன். நான் பிரமலை கள்ளர் சமுதாயத்தைச் சார்ந்தவர். எனக்கு அபன்கான்பாய் என்பவர் நண்பர். அவர்மூலம் எதிரி எனக்கு பழக்கம். அபன்கானை எனக்கு 7,8 வருடங்களாகத் தெரியும். அபன்கான் எதிரியை எனக்கு 2016ல் அறிமுகப்படுத்தி வைத்தார். இரண்டுமுறை எதிரியை என் வீட்டிற்கு அழைத்து வந்தார். எதிரியுடன் எனக்கு நேரடி பழக்கம் கிடையாது. அபன்கான் மூலமாகத்தான் தெரியும். அதனால் நான் மனுவில் எதிரி எனக்கு நல்ல நண்பர் என்று கூறியுள்ளது தவறு என்றால் நான் அபன்கானின் மூலம் பழக்கம் ஏற்பட்டு அவரை நம்பித்தான் பணம் கொடுத்தேன். எதிரி வேலை பார்ப்பதாகவும் வசதியாக இருப்பதாகவும் அபன்கான் சொன்னார். எதிரியும் சொன்னார். எதிரி என்ன வேலை பார்த்தார் என்று தெரியாது. அவருக்கு ஓய்வூதியம் கிடைப்பதாக சொன்னார். எவ்வளவு ஓய்வூதியம் என்று தெரியாது. எதிரியை இரண்டு முறை தான் பார்த்துள்ளேன் என்றும் அபன்கான் மூலம் அறிமுகம் என்றும் அவரை நம்பித்தான் பணம் கொடுத்தேன் என்றும் தற்போது கூறுவதை என்னுடைய அறிவிப்பிலோ புகாரிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் அதுகுறித்து தெரியவில்லை. என் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். முதல்விசாரணை வாக்குமூலத்தை நான் சொல்லி என் வழக்கறிஞர் தயாரித்தார். என் பெயர் ராமன். என்னை கட்டராமன் என்று அழைப்பார்கள். எதிரிக்கு பணம் கொடுத்தபோது கலியாணம் விசேசம் வைத்ததால் என் வீட்டில் பணம் இருந்தது. எப்பொழுதும் வீட்டில் பணம் இருக்காது. என் மூத்த மகனுக்கு 2015ம் ஆண்டு கடைசியில் கலியாணம் வைத்திருந்தேன். தேதி ஞாபகமில்லை. அதில் மொய்ப்பணமாக ரூ 9 லட்சம் கிடைத்தது. அதற்குரிய மொய் நோட்டு உள்ளது. நீதிமன்றத்தில் தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம். நான் வருமானவரி செலுத்துவதில்லை. விவசாய வருமானம் தான். நான் எதிரிக்கு இதற்கு முன்பு சிறுகடன் எதுவும் கொடுத்ததில்லை. 2015ம் ஆண்டு என் மகனுக்கு திருமணம் நடந்தது என்றும் அதில் கிடைத்த பணத்தை தான் எதிரிக்கு கொடுத்தேன் என்ற விபரத்தையும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். எதிரி

என்னிடம் அவருடைய மகனுக்கோ மகளுக்கோ திருமணம் என்றும் அந்த பணத்தை 20 நாட்களில் தந்து விடுவதாகவும் சொன்னார். ரூ 3 லட்சம் கேட்டார். நான் அபன்கான் பொறுப்பேற்றதால் எதிரிக்கு பணம் கொடுத்தேன். அபன்கானுக்கு எதிரி நல்ல பழக்கம். எதிரி 2.2.2016ல் என்னிடம் வந்து பணம் கேட்டார். அன்றைய தினமே பணம் கொடுத்து விட்டேன். எதிரியிடம் தான் ரூ 3 லட்சத்தை எண்ணிக் கொடுத்தேன். என் வீட்டில் வைத்துதான் பணம் கொடுத்தேன். என் வீட்டில் வேறு யாரும் இல்லை. எதிரியும் அபன்கானும் தான் இருந்தார்கள். எதிரிதான் என்னிடம் காசோலையை கையெழுத்திட்டுக் கொடுத்தார். கையொப்பம் மட்டும் தான் இட்டார். தேதி, தொகை விபரங்களை யார் நிரப்பினார் என்றால் எதிரி தான் அதனை நிரப்பி கொடுத்தார். தொகையை எழுத்தாலும் எதிரிதான் எழுதிக் கொடுத்தார். என் முன்னிலையில்தான் எதிரி தேதி, தொகையை எண்ணாலும் எழுத்தாலும் எழுதி பெயர் எழுதினார். என்னிடம் காட்டப்படும் புதசாஆ 1 காசோலையில் மேற்படி விபரங்கள் அனைத்தும் ஒரே மையில்தான் எழுதப்பட்டுள்ளன. எதிரி அன்றைய தினம் என் முன்னிலையில் அனைத்து விபரங்களையும் காசோலையில் ஒரே பேனாவால் தான் எழுதினார். நான் எதிரியிடம் 5வது மாதம் பணத்தை திருப்பி கேட்டேன். அபன்கான் மூலம் பணத்தை கேட்டேன். அவரிடம் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யச் சொன்னதாக அவர் என்னிடம் சொன்னார். கடன் கொடுத்த பிறகு எதிரியை பார்க்கவில்லை என்றால் காசோலை திரும்ப வந்தபிறகு எதிரியிடம் பணத்தை கேட்டேன். எதிரியை செக்கானூரணியில் உள்ள தேவா ஆப்டிக்கல்ஸ் கடைக்கு வரச்சொல்லி பணத்தை கேட்டேன். அப்போது அந்தக் கடையில் என் நண்பர் பாண்டி இருந்தார். அவர்தான் கடையின் உரிமையாளர். அப்போது கடை ஊழியர் யாரும் இல்லை. ஊழியர்களை எனக்கு தெரியும். மீனா என்பவர் அந்தக் கடையில் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். அவருக்கும் எனக்கும் உறவு முறை கிடையாது. காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் எதிரியை நேரடியாக பார்க்கவில்லை. எதிரி பணம் வாங்கும்போது 20 நாட்களுக்குள் பணத்தை தராவிட்டால் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யுங்கள் என்று சொன்னார். 5.5.2016ல் காசோலையை நானாகத்தான் வசூலுக்கு தாக்கல் செய்தேன். அன்றைய தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்யச் சொல்லி யாரும் சொல்லவில்லை. எதிரியின் காசோலை கரூர் வைஸ்யா வங்கி, மதுரை தல்லாகுளம் கிளையைச் சார்ந்ததாகும். எதிரியின் காசோலை எண்: 000121. எதிரியின் வங்கி கணக்கில் பணம் இல்லை என்று காசோலை திரும்ப வந்தது. மறுநாள் 6.5.2016ம் தேதியில் எனக்கு காசோலை திரும்பிய

விபரம் தெரியவந்தது. 20 நாட்கள் கழித்து அறிவிப்பு அனுப்பினேன். தேதி ஞாபகமில்லை. அந்த அறிவிப்பினை எதிரி பெற்றுக் கொண்டார். பதில் அறிவிப்பு எதுவும் எனக்கு வரவில்லை. வழக்கறிஞர் எதுவும் எனக்கு சொல்லவில்லை. வழக்க்றிஞரிடம் நான்தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்று சொன்னேன். எனக்கு முதலில் வழக்கறிஞர் மாணிக்கம் இருந்தார். தற்போது அவர் தம்பி எனக்கு வழக்கறிஞராக உள்ளார். கவணம்பட்டி ரோட்டில் அவருடைய அலுவலகம் உள்ளது. வழக்கறிஞர் அலுவலகத்துக்கு அபன்கானை ஒருநாள் சாட்சி சொல்ல வேண்டும் என்று அழைத்து சென்றேன். நான் வழக்கு விபரத்தினை வழக்கறிஞருக்கு சொன்னதாக சொல்வது பொய் என்றும் அபன்கான்தான் என் வழக்கறிஞருக்கு பொய்யான வழக்கு விபரத்தை சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் நேரடியாக வழக்கறிஞர் அலுவ லகத்துக்கு சென்று வழக்கு விபரம் சொல்லியிருந்தால் எதிரி பதிலறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றும் நான் அவ்வாறு செல்லாததால்தான் எனக்கு தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புதசாஆ 5 ஆவணம் என் வழக்கறிஞருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பாகும். இந்த அறிவிப்பு குறித்து என் வழக்கறிஞர் என்னிடம் கூறி வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்று சொன்னார். நான் அதனை படித்துப் பார்க்கவில்லை. வழக்கறிஞரும் படித்து கூறவில்லை. அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. பதிலறிவிப்பிறகு நான் மறு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை.

(எதிரிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

/Sd./ Raman

Taken down by me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd./ M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.